# இபலோகம பிரதேச சபை

## அநுராதபுர மாவட்டம்

-----------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

-----------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 25 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 ஏப்ரல் 07 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 11 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

---------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு இபலோகம பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

---------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---------------------------------------------

(அ) நிலுவை நீதி மன்றத் தண்டப் பணப் பெறுவனவு ரூபா 449,361 இனை மீளாய்வாண்டிற்கான வருமானம் என கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) புர நெகும செயற்திட்டத்தின் மூலம் 2014 ஆண்டின் போது சபைக்கு வழங்கியிருந்த 02 கணனிகள் மற்றும் துணைக் கருவிகளின் பெறுமதியினை இனங்கண்டு கணக்கீடு செய்திருக்கவில்லை.

(இ) முன்னைய மூன்று வருடங்கள் தொடர்பாக ஏற்பாடு செய்திருந்த முத்திரைக் கட்டண தொகையினை மிகைத்து கிடைத்திருந்த ரூபா 866,690 தொகை தொடர்பாக பொருத்தமான சீராக்கல் மேற்கொள்ளப்படாமையால் திரண்ட நிதியம் மற்றும் பெற வேண்டிய முத்திரைக் கட்டணம் அதே தொகையால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

-------------------------

### 2.1 நிதி விளைவுகள்

---------------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது செயற்பாட்டு மிகை ரூபா 794,018 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் செயற்பாட்டு மிகை ரூபா 1,713,359 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

----------------------------------

#### 2.2.1 வீத வரி

---------------

அதிகாரப் பிரதேசத்தில் முன்னேற்றப்பட்ட பிரதேசங்கள் என இனங்கண்டுள்ள பகுதிகளில் காணப்படும் வீடுகள் மற்றும் ஆதனங்களின் பெறுமதியை மதிப்பீடு செய்து உரிய முறைப்படி பகிரங்கப்படுத்தி குறிப்பிட்ட வீத வரி வருமானத்தை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

#### 2.2.2 நீதி மன்றத் தண்டப் பணம்

-----------------------------------------------

சபைக்கு மாதாந்தம் அறவிடப்பட வேண்டிய நீதி மன்றத் தண்டப் பண வருமானம் தொடர்பாக குறிப்பிட்ட நீதி மன்றத்தின் பதிவாளரிடம் உறுதிப்படுத்தல்கள் பெற்றுக்கொண்டு நீதிமன்றத் தண்டப்பண வருமானத்தை தீர்மானிப்பதற்காக சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

#### 2.2.3 முத்திரைக் கட்டணம்

-----------------------------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகள் தொடர்பாக சபைக்கு அறவிடப்பட வேண்டிய முத்திரைக் கட்டண வருமானத்தை முறைப்படி இனங்கண்டு அறவீடு செய்வதற்காக சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

#### 2.2.4 விளம்பர அறிவித்தல் பலகை கட்டணம்

--------------------------------------------------------------------

சபையின் அதிகாரப் பிரதேசத்தில் விளம்பரப்படுத்தப்படும் விளம்பர அறிவித்தல் பலகைகளுக்காக அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவீடு செய்வதற்காக ஏற்பாடுகள் 2013 நவம்பர் 29 திகதி வர்த்தமானி அறிவித்தலில் வெளியிட்டிருந்த போதிலும் காட்சிப்படுத்தப்படும் விளம்பர அறிவித்தல் பலகை மூலம் வருமானத்தை அறவீடு செய்வதற்காக போதியளவு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

3. செயற்பாட்டு மீளாய்வு

---------------------------------

3.1 செயற்பாட்டுத் திறமையின்மை

--------------------------------------------------

(அ) சபைக்குச் சொந்தமான வாகனங்கள் மற்றும் பொறியும் பொறித் தொகுதியும் வெளிச் செல்லும் போது முறையான அங்கீகாரத்தின் கீழ் உரிய செயற்பாடு ஒன்றின் பிரகாரம் மேற்கொள்ளப்படவில்லை என வெளிப்படுத்தப்பட்டதுடன் வருமான உருவாக்கு செயற்பாடுகளில் ஈடுபடுத்தக் கூடிய வாகனங்கள் மற்றும் இயந்திரங்களின் மூலம் வருமானம் உழைப்பதற்காக உரிய முறைமை ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) (அதிகாரம் 203) மோட்டார் வாகனச் சட்டத்தின் பிரிவு 2(1) இன் பிரகாரம் ஓட்டுவதற்கு முன்னர் அனைத்து வாகனங்களும் மேட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தில் பதிவு செய்யப்பட வேண்டும் எனினும் நீண்ட காலத்திற்கு முன்னர் சபைக்கு கிடைதிருந்த 02 நீர் பவுசர்கள் பதிவு செய்யப்படாமல் ஓட்டப்பட்டுள்ளன.

(இ) 2002 நவம்பர் 28 திகதி IAI/2002/02 கொண்ட திறைச் சேரி சுற்று நிருபத்தின் பிரகாரம் கணனி துணைக் கருவிகள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பாக நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை.

3.2 பயன்படுத்தப்படாத மற்றும் குறை பயன்பாட்டு சொத்துக்கள்

---------------------------------------------------------------------------------------------

சபைக்குச் சொந்தமான ரூபா 500,000 தொகை பெறுமதியான மின் பிறப்பாக்கி மீளாய்வாண்டின் போது செயற்படாது காணப்பட்டது.

4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-----------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(ஆ) கணக்கீடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்